சுருக்கம்

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை – ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் – 6202 அங்கன்வாடி கட்டிடங்களில் பெரிய பழுதுகள் சரி செய்யும் பணிகளுக்காக ரூ.39.1376 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டது – சில திருத்தங்கள் செய்து ஆணை – வெளியிடப்படுகிறது.

---

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்(சந7)துறை

அரசாணை (நிலை) எண்.5

நாள்:08.01.2013
திருவள்ளுவராண்டு 2043
மார்கழி 24

படிக்கப்பட்டவை

பார்வை: 1 அரசாணை (நிலை) எண்.64, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 17.4.2012.

2 பேரூராட்சிகளின் இயக்குநரது கடிதங்கள் நாள் 9.7.2012, 1.10.2012, 2.11.12, 19.11.12 மற்றும் 22.11.12.

+++++

ஆணை:

பார்வை 1ல் காணும் அரசாணையில் ஊரக மற்றும் நகர்புற பகுதிகளில் பழுதடைந்துள்ள அங்கன்வாடி கட்டிடங்களில் பெரிய பழுதுகளை சரி செய்ய ரூ.39.1376 கோடி நிதி ஒதுக்கீடு செய்தும் மேலும் இப்பணியைக் கண்காணிக்க ஒரு குழு அமைத்தும் ஆணை வெளியிடப்பட்டது. மேலும் அவ்வாணையில் பேரூராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள அங்கன்வாடி மைய கட்டிடங்களில் 416 அங்கன்வாடி மைய கட்டிடங்களில் ஏற்பட்டுள்ள பெரிய பழுதுகளை சரிசெய்யும் பணிகளுக்காக ரூ.333.75 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்தும், நிர்வாக அனுமதியளித்தும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2. பார்வை 2ல் காணும், கடிதங்கள் வாயிலாக பேரூராட்சிகளின் இயக்குநர், மேற்காணும் அரசாணையில் 25 மாவட்டங்களில் உள்ள பேரூராட்சிகளில் 416 அங்கன்வாடி மைய கட்டிடங்களில் பணிகள் மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளதாகவும், இதன்படி காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள பேரூராட்சிகளில் உள்ள 11 அங்கன்வாடி மைய கட்டிட பணிகளை தவிர்த்து மற்ற பணிகளை 17.7.2012க்குள் ஒப்பந்த புள்ளிகளை பெற்று பணிகளை துவக்கி அனைத்து பணிகளையும் 15.8.2012க்குள் முடித்து பயனீட்டு சான்று மற்றும் பணி முடிவு அறிக்கை அளித்திட தேவையான அறிவுரைகள் அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்/உதவி

செயற்பொறியாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் அரசாணையில் ரூபாய் 1.00 லட்சத்திற்குள்ளான பெரிய பழுதுகளை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் மட்டும் 11 அங்கன்வாடி மைய கட்டிடங்களில் பெரிய பழுதுகளை மேற்கொள்ள ரூ.73.40 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதாவது 11 அங்கன்வாடி மையங்களில் பெரிய பழுதுகளை சரிசெய்ய ஒரு கட்டிடத்திற்கு சராசரியாக ரூ.6.67 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், தற்போது காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள பேரூராட்சிகளில் 2 பணிகளுக்கு (ரூ.25,000/– முதல் ரூ.50,000/– வரை) ரூ.0.96 லட்சமும் 5 பணிகளுக்கு (ரூ.50,001/– முதல் ரூ.75,000/–வரை) ரூ.3.04 லட்சம் மதிப்பீட்டிலும் மீதியுள்ள 4 பணிகள் ரூ.75,001/– முதல் ரூ1,00,000/– வரை ரூ.3.34 லட்சம் மதிப்பீட்டிலும் ஆக மொத்தம் 11 பணிகளுக்கு ரூ.7.34 லட்சம் மட்டுமே மதிப்பீடாக தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து மேலே படிக்கப்பட்ட அரசாணைக்கு கீழ்க்கண்டவாறு திருத்தம் வெளியிடுமாறு பேரூராட்சிகள் இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

i) காஞ்சிபுரம் மாவட்ட பேரூராட்சி பகுதியில் அமைந்துள்ள 11 அங்கன்வாடி மைய கட்டிடங்களில் பெரிய பழுதுகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீட்டு தொகையான ரூ.73.40 லட்சம் என்பதற்கு பதிலாக ரூ.7.34 லட்சம் என திருத்தம் செய்யப்பட வேண்டும்.

ii) மதுரை மாவட்ட பேரூராட்சி பகுதியில் அமைந்துள்ள 24 அங்கன்வாடி மைய கட்டிடங்களில் பெரிய பழுதுகள் மேற்கொள்ள ரூ.16.26 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் 5 அங்கன்வாடி மையங்கள் முற்றிலும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் 19 பணிகளை ரூ.16.27 லட்சம் ஒதுக்கீட்டில் மேற்கொள்ள முன்மொழிவு செய்யப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு அங்கன்வாடி மையம் முற்றிலும் பழுதடைந்து உள்ளது. எனவே மொத்த ஒதுக்கீட்டுத் தொகை 416 பணிகளுக்கு ரூ.333.75 லட்சம் என்பதற்கு பதிலாக 480 பணிகளுக்கு ரூ.333.75 லட்சம் என ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். மேலும் அரசாணையின் படி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையில் மீதமுள்ள தொகையான ரூ.65.91 லட்சத்தில் மதுரை மாவட்டத்தில் உள்ள பேரூராட்சிகளில் அமைந்துள்ள 12 அங்கன்வாடி கட்டிடங்களில் பெரிய பழுதுகள் நீக்குவதற்கு ரூ.25.96 லட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் தேனி மாவட்டத்தில் உள்ள பேரூராட்சிகளில் 58 அங்கன்வாடி மையங்களில் ரூ.39.95 லட்சம் மதிப்பீட்டில் பழுது நீக்க அனுமதியளிக்குமாறு பேரூராட்சிகள் இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

iii) விழுப்புரம் மாவட்டத்தில் பேரூராட்சிகள் பகுதியில் அமைந்துள்ள 5 அங்கன்வாடி கட்டடங்களில் பெரிய பழுதுகள் மேற்கொள்ள ரூ.2.21 லட்சம் ஒதுக்கீடு செய்துள்ளதற்கு பதிலாக ரூ.2.35 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

iv) பேரூராட்சிகளுக்கான ஒதுக்கீட்டு தொகை பேரூராட்சிகளின் இயக்குநரால் பெறப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவருக்கு வழங்கவும், அதன் பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் சம்பந்தப்பட்ட பேரூராட்சிகளுக்கு பிரித்து வழங்க வேண்டும் என்பதற்கு பதிலாக சம்பந்தப்பட்ட பேரூராட்சிகளுக்கு நேரடியாக விடுவிக்க வேண்டும் பணி முடிவறிக்கை மற்றும் பயனீட்டு சான்று உதவி இயக்குநர்கள் மூலம் பெற்று அனுப்பப்பட வேண்டும் என திருத்தங்கள் செய்து ஆணை பிறப்பிக்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

3. பேரூராட்சிகளின் இயக்குநரது கருத்துருவிற்கு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட முதன்மைச் செயலர் / சிறப்பு ஆணையரும் தனது ஒப்புதலை தெரிவித்ததை அடுத்து,

மேற்படி இரு துறைத்தலைவர்களின் கருத்துருவை அரசு கவனமாக பரிசீலித்த பின் மேலே படிக்கப்பட்ட அரசாணைக்கு கீழ்க்காணும் திருத்தங்கள் செய்து ஆணையிடுகிறது.

<u>திருத்தம்</u>

1) மேலே படிக்கப்பட்ட அரசாணையின் இணைப்பு 1ல் வரிசை எண்.9ல் காஞ்சிபுரம் மாவட்ட பேரூராட்சி பகுதியில் அமைந்துள்ள 11 அங்கன்வாடி மைய கட்டிடங்களில் பெரிய பழுதுகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீட்டு தொகையான ரூ.73.40 லட்சம் என்பத்ற்கு பதிலாக ரூ.7.34 லட்சம் என வாசிக்கவும்.

2) மேற்கண்ட இணைப்பு 1ல் வரிசை எண் 12ல் மதுரை மாவட்ட பேரூராட்சி பகுதியில் அமைந்துள்ள 24 அங்கன்வாடி மைய கட்டிடங்களில் பெரிய பழுதுகள் மேற்கொள்ள ரூ.16.26 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதற்கு பதிலாக 31 அங்கன்வாடி மையக்கட்டிடங்களில் உள்ள பெரிய பழுதுகளை நீக்கும் பணிகளை செய்வதற்கு ரூ.42.23 லட்சம் ஒதுக்கீடு என வாசிக்கவும்.

3) மேற்கண்ட இணைப்பு 1ல் வ.எண்.22ல் தேனி மாவட்ட பேரூராட்சி பகுதியில் அமைந்துள்ள 58 அங்கன்வாடி மையக் கட்டிடங்களில் உள்ள பெரிய் பழுதுகளை நீக்கும் பணிகளை செய்வதற்கு ரூ.39.95 லட்சம் ஒதுக்கீடு என சேர்த்து வாசிக்கவும்.

4) மேற்கண்ட இணைப்பு 1ல் வ.எண்.31ல் விழுப்புரம் மாவட்ட பேரூராட்சி பகுதியில் அமைந்துள்ள 5 அங்கன்வாடி மையக் கட்டிடங்களில் பெரிய பழுதுகள் மேற்கொள்ள ரூ.2.21 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதற்கு பதிலாக ரூ.2.35 லட்சம் என்று வாசிக்கவும்.

5) மேற்கூறிய அரசாணையின்படி இணைப்பு 1ல் பேரூராட்சிகளில் உள்ள பெரிய பழுதுகளை நீக்குவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.333.75 லட்சம் தொகையில் 416 பணிகள் மேற்கொள்ள வேண்டும் என்பதற்கு பதிலாக 480 பணிகள் மேற்கொள்ள வேண்டும் என்று வாசிக்கவும்.

6) மேற்கண்ட அரசாணையின் இணைப்பு 1ற்கு பதிலாக திருத்தங்களுடன் கூடிய 'புதிய இணைப்பு 1'ஐ வாசிக்கவும்.

7) மேலே படிக்கப்பட்ட அரசாணை பத்தி 7ல் பேரூராட்சிகளுக்கான ஒதுக்கீட்டு தொகை பேரூராட்சிகளின் இயக்குநரால் பெறப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவருக்கு வழங்கவும், அதன் பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் சம்பந்தப்பட்ட பேரூராட்சிகளுக்கு பிரித்து வழங்க வேண்டும் என்ற வார்த்தைகளுக்கு பதிலாக "சம்பந்தப்பட்ட பேரூராட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை பேரூராட்சிகளின் இயக்குநருக்கு நேரடியாக விடுவிக்கப் படவேண்டும். பணி முடிவறிக்கை மற்றும் பயனீட்டு சான்றினை பேரூராட்சி உதவி இயக்குநர்கள் மூலம் பெற்று முதன்மைச் செயலர் / சிறப்பு ஆணையர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் மற்றும் அரசுக்கு பேரூராட்சிகள் இயக்குநரால் அனுப்பப்பட வேண்டும்" என்று திருத்தி வாசிக்கவும்.

4. மேலே படிக்கப்பட்ட அரசாணைக்கு, முன்பத்தி 3ல் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்களின் படி மொத்தம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.333.75 லட்சம் தொகையை 410 பணிகள் மேற்கொள்ள ரூ.267.69 லட்சம் போக மீதமுள்ள தொகையான ரூ.66.06 லட்சத்தில் கூடுதலாக 70 பணிகள்

மேற்கொள்ள மதுரை மாவட்டத்தில் உள்ள பேரூராட்சிகளில் அமைந்துள்ள 12 அங்கன்வாடி கட்டிடங்களில் பழுதுகள் சரிசெய்ய ரூ.25.97 லட்சம் மதிப்பீட்டிலும், தேனி மாவட்டத்தில் உள்ள பேரூராட்சிகளில் அமைந்துள்ள 58 அங்கன்வாடி கட்டிடங்களில் பழுதுகள் சரிசெய்ய ரூ.39.95 லட்சம் மதிப்பீட்டில் பழுது நீக்கவும் மற்றும் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள பேரூராட்சிகளில் அமைந்துள்ள 5 அங்கன்வாடி கட்டிடங்களில் பழுது நீக்க ஏற்கனவே அரசாணையில் குறிப்பிட்டுள்ள ரூ.2.21 லட்சத்துக்கு கூடுதலாக ரூ.0.14 லட்சம் மதிப்பீட்டிலும் பழுதுகள் சரி செய்ய பேரூராட்சிகள் இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

5. இந்த அரசாணை நிதி (சந) த்துறையின் அ.சா.கு.எண்.304/து.செ(வி.சூ)/2012, நாள் 18.12.2012ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அசோக் டோங்ரே
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

முதன்மைச் செயலாளர்/ சிறப்பு ஆணையர்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்,
தரமணி, சென்னை-113
ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, சென்னை–15
ஆணையர், நகராட்சி நிர்வாகம், சென்னை–5.
இயக்குநர், பேரூராட்சிகள் இயக்ககம், குறளகம், சென்னை–108

நகல்

முதன்மைச் செயலர், நிதித்துறை, சென்னை–9
முதன்மைச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, சென்னை–1
முதன்மைச் செயலாளர் (கூடுதல் பொறுப்பு),
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர்,
சென்னை–9.
நிதி (சந) (ஊ.வ) (ந.நி (ம) கு.வ.) துறை, சென்னை–9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, சென்னை–9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு/ உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.
8/1/2013

NEW ANNEXURE I

G.O.(Ms) No.5, SOCIAL WELFARE AND NUTRITIOUS MEAL PROGRAMME DEPARTMENT, DATED.08.01.2013

COST ESTIMATION FOR UNDERTAKING MAJOR REPAIRS IN AWCS (RURAL)

| Sl.No. | Name of the District | Village Panchayat | | | | | | | | | | Town Panchayat | | | | | | | | | | | | Total No. of VP & TP Centres | Total amount of VP& TP centres |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Below Rs.25,000 | | Rs.25001 to Rs.50000 | | Rs.50001 to Rs.75000 | | Rs.75001 to Rs.1.00 lakh | | Total No. of VP Centres | Total amount of VP centres | Below Rs.25,000 | | Rs.25001 to Rs.50000 | | Rs.50001 to Rs.75000 | | Rs.75001 to Rs.1.00 lakh | | Above 1.00 lakh | | Total No. of TP Centres | Total amount of TP centres | | |
| | | No. of centres | Amount | No. of centres | Amount | No. of centres | Amount | No. of centres | Amount | | | No. of centres | Amount | No. of centres | Amount | No. of centres | Amount | No. of centres | Amount | No. of centres | Amount | | | | |
| 1 | Ariyalur | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | | | 0 | 0.00 | 0.00 | 0.00 |
| 2 | Chennai | | | | | | | | | 0 | 0.00 | | | | | | | | | | | 0 | 0.00 | 0 | 0.00 |
| 3 | Coimbatore | 0 | 0.00 | 5 | 2.30 | 1 | 0.60 | 103 | 93.36 | 109 | 96.26 | 5 | 1.00 | 8 | 3.60 | 2 | 1.35 | 0 | 0.00 | 0 | 0.00 | 15 | 5.95 | 124 | 102.21 |
| 4 | Cuddalore | 44 | 9.24 | 304 | 129.06 | 109 | 69.36 | 117 | 103.46 | 574 | 311.12 | 2 | 0.48 | 5 | 2.10 | 12 | 8.59 | 0 | 0.00 | 0 | 0.00 | 19 | 11.17 | 593 | 322.29 |
| 5 | Dharmapuri | 9 | 2.00 | 25 | 10.37 | 62 | 40.08 | 44 | 38.05 | 140 | 90.50 | 0 | 0.00 | 0 | 0.00 | 4 | 2.53 | 4 | 3.88 | 0 | 0.00 | 8 | 6.41 | 148 | 96.91 |
| 6 | Dindigul | 11 | 2.34 | 83 | 33.95 | 32 | 19.78 | 164 | 89.89 | 290 | 145.96 | 0 | 0.00 | 13 | 4.75 | 10 | 6.80 | 5 | 4.66 | 0 | 0.00 | 28 | 16.21 | 318 | 162.17 |
| 7 | Erode | 7 | 1.49 | 89 | 38.34 | 50 | 31.27 | 30 | 26.37 | 176 | 97.47 | 1 | 0.18 | 15 | 6.55 | 4 | 2.40 | 12 | 11.37 | 0 | 0.00 | 32 | 20.50 | 208 | 117.97 |
| 8 | Kanniyakumari | 0 | 0.00 | 11 | 4.72 | 8 | 5.75 | 10 | 9.03 | 29 | 19.50 | 16 | 2.64 | 28 | 10.49 | 31 | 21.73 | 25 | 24.20 | 0 | 0.00 | 100 | 59.06 | 129 | 78.56 |
| 9 | Kancheepuram | 0 | 0.00 | 32 | 13.27 | 75 | 46.14 | 109 | 93.45 | 216 | 152.86 | 0 | 0.00 | 2 | 0.96 | 5 | 3.04 | 4 | 3.34 | 0 | 0.00 | 11 | 7.34 | 227 | 160.20 |
| 10 | Karur | 0 | 0.00 | 18 | 8.96 | 4 | 2.65 | 20 | 19.46 | 42 | 31.07 | 0 | 0.00 | 4 | 1.96 | 1 | 0.75 | 7 | 7.00 | 0 | 0.00 | 12 | 9.71 | 54 | 40.78 |
| 11 | Krishnagiri | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 59 | 49.31 | 59 | 49.31 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 4 | 3.85 | 0 | 0.00 | 4 | 3.85 | 63 | 53.16 |
| 12 | Madurai | 41 | 6.55 | 88 | 37.74 | 104 | 67.05 | 131 | 122.90 | 364 | 234.24 | 3 | 0.61 | 0 | 0.00 | 10 | 10.26 | 6 | 5.40 | 12 | 25.96 | 31 | 42.23 | 395 | 276.47 |
| 13 | Nagapattinam | 17 | 2.89 | 12 | 5.30 | 36 | 24.48 | 21 | 17.74 | 86 | 50.41 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 1 | 0.90 | 0 | 0.00 | 1 | 0.90 | 87 | 51.31 |
| 14 | Namakkal | 0 | | 30 | 13.68 | 36 | 22.03 | 46 | 42.01 | 112 | 77.72 | 0 | 0.00 | 3 | 1.07 | 6 | 4.09 | 11 | 10.41 | 0 | 0.00 | 20 | 15.57 | 132 | 93.29 |
| 15 | Nilgiris | 3 | 0.56 | 1 | 0.50 | 0 | 0.00 | 19 | 16.60 | 23 | 17.66 | 1 | 0.22 | 2 | 0.85 | 5 | 3.10 | 4 | 3.75 | 0 | 0.00 | 12 | 7.92 | 35 | 25.58 |
| 16 | Perambalur | 3 | 0.48 | 10 | 3.93 | 42 | 27.13 | 54 | 47.56 | 109 | 79.10 | 0 | 0.00 | 0 | 0.00 | 4 | 2.37 | 6 | 5.20 | 0 | 0.00 | 10 | 7.57 | 119 | 86.67 |
| 17 | Pudukottai | 0 | 0.00 | 14 | 7.00 | 77 | 50.60 | 51 | 50.24 | 142 | 107.84 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 142 | 107.84 |
| 18 | Ramnad | 1 | 0.25 | 78 | 36.30 | 53 | 35.57 | 15 | 13.45 | 147 | 85.57 | 0 | 0.00 | 0 | 0.00 | 4 | 3.68 | 0 | 0.00 | 0 | 0.00 | 4 | 3.68 | 151 | 89.25 |
| 19 | Salem | 0 | 0.00 | 166 | 67.87 | 134 | 82.08 | 121 | 112.58 | 421 | 262.53 | 0 | 0.00 | 0 | 0.00 | 13 | 8.65 | 8 | 8.00 | 0 | 0.00 | 21 | 16.65 | 442 | 279.18 |
| 20 | Sivagangai | 0 | 0.00 | 0 | 0.00 | 38 | 24.96 | 15 | 12.32 | 53 | 37.28 | 2 | 0.50 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 2 | 0.50 | 55 | 37.78 |
| 21 | Thanjavur | 4 | 1.00 | 124 | 49.75 | 6 | 3.59 | 56 | 48.85 | 190 | 103.19 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 3 | 2.71 | 0 | 0.00 | 3 | 2.71 | 193 | 105.90 |
| 22 | Theni | 0 | 0.00 | 5 | 2.50 | 8 | 4.75 | 6 | 6.00 | 19 | 13.25 | 2 | 0.20 | 26 | 9.75 | 0 | 0.00 | 30 | 30.00 | 0 | 0.00 | 58 | 39.95 | 77 | 53.20 |
| 23 | Tiruvallur | 8 | 2.00 | 19 | 9.50 | 37 | 24.07 | 85 | 74.93 | 149 | 110.50 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 149 | 110.50 |
| 24 | Thiruvannamalai | 2 | 0.40 | 52 | 25.80 | 18 | 10.90 | 65 | 62.80 | 137 | 99.90 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 137 | 99.90 |
| 25 | Tirunelveli | 4 | 0.95 | 34 | 13.87 | 31 | 36.10 | 21 | 72.46 | 90 | 123.38 | 0 | 0.00 | 5 | 2.25 | 1 | 0.68 | 0 | 0.00 | 0 | 0.00 | 6 | 2.93 | 96 | 126.31 |
| 26 | Tiruvarur | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 58 | 49.89 | 58 | 49.89 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 1 | 0.78 | 0 | 0.00 | 1 | 0.78 | 59 | 50.67 |
| 27 | Tiruppur | 12 | 2.68 | 2 | 0.65 | 0 | 0.00 | 1 | 0.80 | 15 | 4.13 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 15 | 4.13 |
| 28 | Tuticorin | 68 | 11.14 | 135 | 54.15 | 84 | 55.17 | 39 | 34.28 | 326 | 154.74 | 3 | 0.70 | 5 | 2.50 | 11 | 6.35 | 7 | 6.20 | 0 | 0.00 | 26 | 16.25 | 352 | 170.99 |
| 29 | Tiruchirapalli | 34 | 8.50 | 168 | 84.00 | 59 | 44.25 | 38 | 38.00 | 299 | 174.75 | 0 | 0.00 | 10 | 5.00 | 4 | 3.00 | 12 | 12.00 | 0 | 0.00 | 26 | 20.00 | 325 | 194.75 |
| 30 | Vellore | 5 | 1.10 | 54 | 23.21 | 124 | 79.48 | 114 | 100.77 | 297 | 204.56 | 0 | 0.00 | 1 | 0.50 | 6 | 3.73 | 5 | 4.34 | 0 | 0.00 | 12 | 8.57 | 309 | 213.13 |
| 31 | Villupuram | 1 | 0.25 | 197 | 85.05 | 76 | 49.34 | 59 | 53.48 | 333 | 188.12 | 0 | 0.00 | 4 | 1.60 | 1 | 0.75 | 0 | 0.00 | 0 | 0.00 | 5 | 2.35 | 338 | 190.47 |
| 32 | Virudhunagar | 40 | 9.03 | 154 | 29.33 | 90 | 57.17 | 35 | 30.64 | 319 | 126.17 | 3 | 0.50 | 8 | 3.14 | 1 | 0.55 | 1 | 0.80 | 0 | 0.00 | 13 | 4.99 | 332 | 131.16 |
| | Total | 314 | 62.85 | 1910 | 791.10 | 1394 | 914.35 | 1706 | 1530.67 | 5324 | 3298.97 | 38 | 7.03 | 139 | 57.07 | 135 | 94.90 | 156 | 148.79 | 12 | 25.96 | 480 | 333.75 | 5604 | 3632.72 |

ASHOK DONGRE
PRINCIPAL SECRETARY TO GOVERNMENT

// forwarded by order //

Section Officer